# திஸ்ஸமஹாராம பிரதோச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 12,698,000 தொகை கிரயத்தை உடைய கொம்பெக்டர் வண்டியின் மற்றும் ரூபா 204,640 பெறுமதியான கணிணிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,996,463 தொகைக்காக செலவுகள் மற்றும் கூட்டுத்தொகை 336,955 தொகைக்கான நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்த 04 நிர்மண வேலைகளுக்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 265,197 குறைவாகக் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்து இருப்பு பெறுமதி ரூபா 231,379 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இறுதி இருப்பில் காணப்பட்ட 103 உபகரண விடயங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காததுடன், காகிதாகிகள் மற்றும் வீதி விளக்கு தொகுதிகளின் பெறுமதி ரூபா 52,138 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களிலுள்ள 19 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளிலேயே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளில் கூட்டுத்தொகை ரூபா 13,802,739 தெகையாகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை மீதான கூற்றில் தொங்கல் கணக்கில் அடங்கியுள்ள ரூபா 272,262 இற்கான வரவு மீதியை தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 13,984,384 தொகைக்கான நிலுவை வருமான மீதி காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

நீண்டகாலமாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,459,027 தொகைக்கான பங்களிப்புத் தொகை, கூட்டுத் தொகை ரூபா 475,225 தொகையான பெறுமதி கூட்டிய வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 24,473,557 தொகைக்கான செலவினங்கள் மற்றும் நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 36,150,004 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 95 | | சாக்கடை வண்டியின் மூலம் அகற்றப்படும் மல கழிவுப் பொருட்களை யால சரணாலயத்தின் எல்லையிலுள்ள திறந்த சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேசசபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| | (i) | விதி 14(1) மற்றும் (2) | 10,705,750 | பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்து மூலதனச் செலவுகள் மேற்கொண்டிருந்தன. |
| | (ii) | விதி இலக்கம் 185 | | பிரதேச சபையின் சேமிப்பு கணக்கின் மற்றும் பொதுக் கணக்கின் காணப்பட்ட மிகை மீதிகளை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) | விதி இலக்கம் 193 | | பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் குறை நிரப்பு ஏற்பாடுகள் உடன் இணைக்கஞ் செய்து ஒவ்வொரு வருமான விடயத்தின் கீழ் காணப்படும் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக விடயங்களை விளக்கும் கூற்றொன்று நிதிக் கூற்றுகளுடன் சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) | நிதிப் பிரமாணங்கள் 103(1)(அ)104 (1),(3),(4) | 730,355 | இரண்டு கப் வண்டிகளுக்கு, கபோஜ கம்பெக்டர் மற்றும் டிரக்டர் வண்டிக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 189 | 346,184 | மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | | | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (உ) | 2010 ஆகஸ்ட் 17 திகதி பீஈ/01/01 இலக்க மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சு சுற்றறிக்கை | | | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இனங்காமை யினால் சபை நிதியத்திலிருந்து பராமரிக்கும் 1852 வீதி விளக்குகளில் 1656 இற்கான கட்டணம் மீளளிப்பு செய்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 நிதி விளைவுகள்**

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 4,892,629 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,023,232 தொகை ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுபாடு**

------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 47,336,896 இற்கான மறை பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 2,820,000 | 2,963,492 | 3,100,407 | 3,252,567 | 2,303,537 | 2,834,159 | 3,456,654 | 3,409,398 |
| (ii) வாடகை | 9,622,700 | 10,145,003 | 10,717,314 | 1,089,089 | 9,934,536 | 9,366,741 | 9,476,001 | 1,421,500 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 13,061,500 | 14,720,225 | 15,087,881 | 336,423 | 11,830,500 | 13,306,732 | 12,514,982 | 795,900 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 23,379,400 | 14,509,692 | 12,877,398 | 18,214,481 | 18,205,696 | 22,009,899 | 14,559,822 | 16,499,648 |
| மொத்தம் | 48,883,600 | 42,338,412 | 41,783,000 | 22,892,560 | 42,274,269 | 47,517,531 | 40,007,459 | 22,126,446 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 42,338,412 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 41,783,000 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 22,126,446 தொகையாக காணப்பட்ட மொத்த நிலுவை வருமானம் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 22,892,560 தொகை வரை அதிகரித்திருந்தது.

**2.3.3 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,874,227 தொகைக்கான நிலுவை வீத வரியில் ரூபா 10,000 இனை விட மிகையான 20 அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 459,051 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நிலுவை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2007 ஆண்டின் போது ஆதன பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

**2.3.4 வாடகை**

**கடை வாடகை**

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 587,057 இற்கான கடை வாடகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபகொ/2010/01 இலக்கம் கொண்ட தென்மாகாண உள்ளுராடசி ஆனையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளம் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டுமெனினும் சபைக்குச் சொந்தமான கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய பெறுமதி மதிப்பீடு செய்யபட்ட வாடகை சபையின் அங்கீகாரத்துடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபை நிதியத்திற்கு ரூபா 8,771,048 வாடகையை இழந்துள்ளது.

(ஈ) குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 11 பந்தியின் பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி வேறு ஒரு தரப்பினருக்கு வாடகை உரிமை சாட்டுதல் செய்யப்பட கூடாது எனினும் ரூபா 5000 முதல் ரூபா 30,000 வரை வீச்சில் மாதாந்த வாடகை தொகைக்கு கடைகளை துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது என 2018 பெப்ரவரி 16 திகதி மேற்கொள்ளபட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) சபைக்கு சொந்தமான 28 கடைகளுக்கு சிட்டையிடல் நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் மீன் விற்பனை நிலைய சிட்டையிட 2012 செப்டம்பர் மாத்தின் நிறுத்திச் சந்தர்ப்பத்திலும் நிலுவையாக காணப்பட்ட ரூபா 355,811 வாடகையில் 2018 பெப்ரவரி 16 திகதி அளவில் ரூபா 28,161 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திர கட்டணம்

சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 149,150 மற்றும் 152 இன் பிரகாரம் அனுமதிப் பத்திர கட்டணம் அறவிடப்படாமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 336,423 தொகை அறவிட்பட வேண்டிக் காணப்பட்டதுடன் வரி செலுத்து புறக்கணிக்கும் தரப்பினர் தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 3,578,222 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 13,930,567 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம்,பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறிப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயற்படுத்தப்படாத நிர்மானவேலைகள்

(i) கிராமப் பிரதேசங்களில் 1000 கீ.மீ பாதை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2 நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்படாமல், பணம் ஒதுக்குவதற்காக மாத்திரம் சிட்டைகள் தயாரித்து சமர்பித்திருந்தமையால், கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது என தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபையின் அதிகார பிரதேசத்திற்கு ரூபா 2,000,000 தொகை பெறுமதியுடைய அபிவிருத்தி நலன்களை இழந்துள்ளது.

(ii) 2017 பாதீட்டுக்கு மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,580,000 தொகைக்கான 24 பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதி முறையே ரூபா 225,000 தொகை மற்றும் 300,000 தொகைக்கான ஆயுர்வேத கழிவறை மற்றும் குளியலறை நிர்மாணித்தல் மற்றும் தெபரவெவ மயானத்தை சுற்றி வேலி நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.

#### (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்கு சொந்தமாக 4.6122 ஹெக்டர் தரைப் பகுதி ஒன்றினை கொண்ட குப்பை முகாமைத்துவ நிலையம் காணப்பட்ட போதிலும், நாளாந்தம்

சேகரிக்கப்படும் குப்பைகள் 6-8 தொன் இடைப்பட்ட அளவு ஒன்று வகைப்படுத்தபடாமல் முறைசாரா விதமாக யால சரணாலயத்தின் எல்லையிலுள்ள 10 ஏக்கர் அளவை கொண்ட காணியில் குவிக்கப்படுகின்றது. இந்த குப்பைகள் உணவுக்காக பயன்படுத்துவதன் காரணமாக வன விலங்குகளின் வாழ்க்கை ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

(ii) இந்த நிலப் பகுதியில் பல வருடங்கள் முதல் சேகரிக்கப்பட்டிருந்த குப்பையில் ஒரு பகுதி மண்படை ஒன்றின் மூடப்பட்டிருந்த போதிலும், நாளாந்தம் சேகரிக்கும் குப்பைகள் மீண்டும் மீண்டும் இந்த பகுதிக்கு விடுவிக்கப்படுவதனால் சுற்றாடலுக்கு மற்றும் இயற்கை அழகிற்கு பிரதிகூலமான தாக்கங்கள் ஏற்பட்டிருந்தது.

(iii) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழஙகப்பட்ட SU-B 01316 (RI) ஆம் இலக்க சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அப்பிரதேசத்தில் போதியளவு தீ அணைப்பு உபரணம் மற்றும் வசதிகள் நிறுவப்பட வேண்டும் எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கபட்ட பதவியனி 09 பதவிகளில் 20 பேர் மிகையாகவும் மற்றும் 16 பதவிகளில் 38 பேர் வெற்றிடமாகவும் காணப்பட்டது.

(ஆ) சபையில் கடமையாற்றும் 12 உத்தியோகத்தர்கள் அவர்களை உரிய கடமைகளில் ஈடுபடுத்தாமல் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 06 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 211,075 இற்கான கடன் மீதி மற்றும் சேவையில் இருந்து நீக்கப்பட்ட, விளகிச் சென்ற மற்றும் ஓய்வுபெற்றுள்ள 07 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 207,061 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தபடாமை

2005 ஆண்டின் போது ரூபா 5,807,500 இற்கான கிரயமொன்று செலவிடப்பட்டு கொள்வனவு செய்து 2013 ஆண்டின் போது அல்லது அதற்கு அண்மித்த காலத்தில் திருத்த வேலை ஒன்றிற்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு ஒப்படைத்திருந்த பெகோ லோடர் 2018 பெப்ரவரி 19 திகதி வரையும் திருத்த வேலை ஒன்று மேற்கொள்ளப்படாமல் கராஜ் வளவில் உக்கக்கூடிய

நிலையில் காணப்பட்ட போதிலும், கடந்த 05 வருட காலத்தில் சபையினால் இது தொடர்பாக எது வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**3.3.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் 19 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமை 2018 திசெம்பர் 19 திகதி வரை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

**3.3.3 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான 03 டிரக்டர்கள், நீர் பவுசர் ஒன்று, ஜீப் வண்டி ஒன்று இரண்டு வள்ளங்கள், 29 தையல் இயந்திரங்கள் மின்பிறப்பாக்கி ஒன்று மற்றும் துண்டுக் கற்கள் தயாரிக்கும் இயந்திரம் நீண்டகாலமாக விளைவற்று காணப்பட்ட போதிலும் அந்த சொத்துகளை பழுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3.4 வருடாந்த பண்ட கணிப்பீடு**

2016 பண்ட கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் சபையின் சொத்துக்கள் தொடர்பான வழங்கியிருந்த ஐந்து விதப்புரைகள் தொடர்பாக 2018 பெப்ரவரி 16 ஆம் திகதியளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.3.5 வாகனப் பயன்பாடு**

சபைக்கு சொந்தமான கப் வண்டி ஒன்றிற்கு புதிய என்ஜின் ஒன்று பொருத்தியிருந்த போதிலும் வாகனத்தின் பதிவு செய்தல் தகவல்கள் சட்டரீதியாக மாற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சபையின் டிரக்டர் வண்டிக்கு 2017 ஜுலை 09 திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக காப்புறுதி உரிமை கோரல், விபத்து ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குள் சமர்பித்திருக்காமையால் காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 39,915 இற்கான தொகை கொடுப்பனவு செலுத்த மறுத்துள்ளது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே பின்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 04 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களில் கூட்டுத்தொகை ரூபா 15,738,343 தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதிகளின் விகிதாசாரம் 8 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 7 செலவு விடயங்களில் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூப 14,980,758 ஆக காணப்பட்டதுடன் அப்பெறுமதிகளின் விகிதாசாரம் 4 சதவீதம் முதல் 57 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) மூலதன செலவு விடயத்தில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 10,705,750 தொகை காணப்பட்டதுடன் அப் பெறுமதி 124 சதவீமாகும்.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 ஆக வருடாந்தம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 01 குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) நிதி கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் உரிய துணைப் பதிவேடுகளின் பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் காணப்படல்.<br>(ii) கணக்கீடு செய்வதில் குறைபாடுகள் காரணமாக கடந்த ஆண்டு தொடர்பாக கணிசமான பெறுமதியின் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நேரிட்டுள்ளது.<br>(iii) தொங்கல் கணக்கு மீதியை தீர்த்திருக்காமை. |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை.<br>(ii) புதிய வருமானங்கள் உருவாகும் வழிகளை இனங்காணாமை.<br>(iii) உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்படாமல் மற்றும் முறையாக பெறுமதி மதிப்பீடு ஒன்று இன்றி கடைகளை வாடகைக்கு கொடுத்தல்.<br>(iv) பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாத மற்றும் சிட்டை இடப்படாமல் கடைகள் காணப்படல். |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு மற்றும் மிகைகள் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்கள் இடையே கணிசமான முரண்கள் காணப்படல்.<br>(ii) பாதிட்டு இலக்குகள் அடைவதற்காக மதிப்பாய்வு தொடர் செயல் மற்றும் நடவடிக்கை எடுக்காமை. |